1993 ஏப்ரல் 16]

அந்தப் பள்ளிகளில் பிளஸ் 2 படிக்கும் மாணவர்கள் பிளஸ் 2 பாஸ் செய்துவிட்டு கல்லூரிகளுக்குச் செல்லும்போது, ஒரு புது யுகத்திற்குள் செல்வது போன்ற தோற்றத்தில் போகிறார்கள். ஆகவே பிளஸ் 2 தேர்வினை மட்டும் கல்லூரியுடன் இணைத்து நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 365, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

365—

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் ஏற்படுத்தல்.

*14970—டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கு முதன்மைக் கல்வி அலுவலகம் ஏற்படுத்தும் கருத்துருவினை அரசு பரிசீலித்து வருகிறது.

முற்பகல் 10-20

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரைத் தலைமையிடமாகக் கொண்ட வட ஆற்காடு மாவட்டமானது, வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம் என்றும், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்றும் 2 ஆண்டுகளுக்கு முன்பு பிரிக்கப்பட்டது. பெரும்பாலான அரசுத் துறைகள் திருவண்ணாமலைக்கு வந்துவிட்டன: ஆனால் முதன்மைக் கல்வி அலுவலகம் மட்டும் இன்னும் வரவில்லை. பள்ளிகளில் வளர்ச்சி பற்றியும் அதன் குறைபாடுகள் பற்றியும் முதன்மைக் கல்வி அலுவலரிடம் சென்று பேசுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட சிரமம் ஏற்படுகிறது. ஆகவே இதை வரும் கல்வியாண்டிலாவது கொண்டுவர பரிசீலனை செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்த பரிசீலனையை விரைவுபடுத்த அரசு முயற்சிக்கும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது பாகப்பிரிவினை என்று வந்து விட்டதோ அப்போது எங்களுக்குண்டான பாகத்தை உவந்தளித்த கல்வி அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி ஆட்சிக்கும் நன்றியைக் கூறி செங்கம் தொகுதியின் மக்கள் சார்பாகவும் எங்கள் மாவட்டத்தில் சார்பாகவும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நன்றி சொல்வதோடு ஏதாவது ஒரு கேள்வி கேட்க வேண்டும்.

வினா எண் 366. திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

366—

கம்மான்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தல்.

*10924—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணியம்பாடி ஒன்றியம், கம்மான்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கணியம்பாடி ஒன்றியத்தில் உள்ள கம்மான்பேட்டையில் ஒரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழாது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அங்கே இயங்கி வருகிறது என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இருப்